**<u>IDOP.No. 7/2025</u>**
**<u>Date :</u> 05.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

RW 1 **திருமதி. வெற்றிச்சுடர்**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. நான் 10-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் வேலைக்கு எதுவும் செல்வதில்லை, வீட்டில் தான் இருக்கிறேன். மனுதாரர் செல்வத்துடன் நான் எந்த வருடம் கடைசியாக வாழ்ந்தேன் என்றால் செப்டம்பர் மாதம் 2025ம் வருடம் நான் கடைசியாக அவரிடம் வாழ்ந்தேன். இது பற்றிய விபரத்தை நான் நிருபண வாக்குமூலத்திலும், எனது எதிருரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2004 ம் ஆண்டு எனக்கும், மனதாரருக்கும் திருமணம் நடைபெற்றது.

2. எனக்கு 2011-ம் ஆண்டு குழந்தை பிறந்தது. எனது குழந்தையை நான் பள்ளியில் சென்று இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு முறை பார்த்தேன். நான் வீட்டை விட்டு வெளியில் வருவதற்கு முன்பு எனது குழந்தையை அதற்கு முன்பு பார்த்தேன். அதன் பிறகு மாதம் ஒரு முறை பள்ளிக்குச் சென்று எனது குழந்தையை பார்த்து வருவேன். 30.09.2024 ஆம் தேதியன்று மதியம் 3.30 மணியளவில் நான் எனது கணவர் வீட்டில் இருந்து தன்னிச்சையாக கிளம்பி சொல்லாமல் சென்னைக்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல.

3. என்னை இரண்டு நாட்கள் எனது கணவர் தேடிப் பார்த்துவிட்டு 02.10.2024 ம் தேதியன்று உத்தமபாளையம் காவல் நிலையத்தில் எனது கணவர் என்னை காணவில்லை என்று புகார் தெரிவித்தார் என்றால் சரிதான். எனது செல்போன் டவர் சென்னையில் இருப்பதை காட்டியதன் அடிப்படையில் போலீசார் என்னை தேடி சென்னைக்கு வந்து என்னை அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான், எனது தங்கையின் வீட்டில் நான் இருந்தேன். எனது பெற்றோர்களுடன் சேர்ந்து நான் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் அவ்வாறு அழைத்து வந்தபோது மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு

விருப்பமில்லை என எழுதி கொடுத்துவிட்டு நான் காவல் நிலையத்திலிருந்து சென்றேன் என்றால் சரியல்ல. நான் அடகு வைத்த நகைகளை திருப்பி விட்டேன்.

4. 14.09.2024, 15.09.2024 மற்றும் 25.09.2024 ம் தேதிகளில் அனுமனுந்தன்பட்டி ஆண்டாள் வங்கியில் எனது நகைகளை நான் அடகு வைத்தேன் என்றால் சரிதான். எனக்கு சத்துணவு கூடத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னதன் பேரில்தான் நான் அடகு வைத்து எனது கணவர் சொன்ன வங்கிக் கணக்கில் அந்த பணத்தை மாற்றி கொடுத்தோம், அது தற்போது புகாராகி சைபர் கிரைம் பிரிவில் வழக்காக உள்ளது. மேற்கண்ட விபரத்தை எனது எதிர் வழக்குரையில் நான் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை.

5. 25.09.2024 ஆம் தேதியன்று உத்தமபாளையம் ஆதித்யா ஜுவல்லரியில் ரூ.1,44,000/-க்கு எனது நகைகளை அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல, எனது கணவர் தான் என்னை வற்புறுத்தியதால் ரூ.7,50,000/- ரூபாய்க்கு எனது நகைகளை மொத்தமாக நான் அடகு வைத்தேன், தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் அடகு வைத்தேன். அவ்வாறு அடகு வைத்த நகைகளில் வந்த பணத்தை எடுத்துக் கொண்டுதான் நான் சென்னையில் எனது சகோதரியின் வீட்டிற்கு மனுதாரரிடம் சொல்லாமல் சென்றேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் எனது சொந்த ஊரில் வாழ்ந்தேன் என்றால் சரிதான்.

6. மனுதாரர் ராணுவத்தில் நாகாலாந்தில் பணிபுரிந்து வந்ததால் அவர் என்னை நாகாலாந்திற்கு அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். ஒன்றரை வருடங்கள் நாகாலாந்தில் பணிபுரிந்த பிறகு அவர் ராஜஸ்தான் மாநிலத்திற்கு பணி மாறுதல் சென்ற பிறகு என்னை அங்கும் அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். ராஜஸ்தானில் இருந்து டெல்லிக்கு பணி மாறுதல் ஆகி 2.½ ஆண்டுகள்

கழித்து சென்றபோது என்னை டெல்லிக்கு எனது கணவர் அவருடன் அழைத்துச் சென்றார் என்றால் சரிதான்.

7. எனது கணவர் தாக்கி எனக்கு கர்ப்பம் கலைந்ததாக நான் சொல்லும் விபரங்களை மெய்பிக்க நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்தது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இராணுவ மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றேன். அது சம்பந்தமான ஆவணங்கள் எனது வீட்டில் உள்ளது, தாக்கல் செய்ய முடியும். மார்ச் மாதம் 2007–ம் வருடம் ஆண்டு 3 ஆம் தேதி இந்த சம்பவம் நடந்தது, அந்த சமயம் நாங்கள் ராஜஸ்தானில் இருந்தோம். எனது கணவருக்கு எதிராக நான் அது சம்பந்தமாக புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

8. டெல்லியில் எனது கணவரும் நானும் இருந்தபோது தான் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். எனது கணவர் என்னை நல்ல வகையில் பார்த்து கொண்டு வந்த காரணத்தினால் தான் நான் அவர் பணி மாறுதல் ஆகி செல்லும் ஊர்களுக்கு எல்லாம் அவருடன் குடும்பமாக சென்றேன் என்றால் சரிதான், ஆனால் அங்கும் என்னை அடிப்பார், சண்டை போடுவார். மனுதாரர் என் மீது இருந்த அன்பின் காரணமாகத்தான் என்னை உள்ளூரில் விடாமல் தான் போகும் ஊர்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றார் என்றால் சரிதான்.

9. காஷ்மீருக்கு மாறுதலாகி எனது கணவர் சென்றபோது தன்னுடன் என்னை அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். எனது கணவர் பணி புரியும் அலுவலகத்திற்கு நான் அடிக்கடி போன் செய்து எனக்கு தனியாக இருப்பதற்கு பயமாக இருக்கிறது என்றும், யாரோ என்னை மிரட்டுவது போல் தெரிகிறது என்று நான் போன் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் போன் செய்துள்ளேன் என்றும் மனுதாரர் மீது சம்பந்தமாக பார்த்தபோது அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக எனது கணவரின் அலுவலகத்திற்கு போன் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. ஒரு நாள் எனது வீட்டின் சுவற்றில் நான் முட்டிக்கொண்டு அழுதேன் என்றால் எனது கணவர் போரில் இறந்து விட்டதாக சொன்னதன் பேரில் நான் அவ்வாறு முட்டி கொண்டு அழுதேன். அக்கம், பக்கத்தில் இருந்தவர்கள் தான் அவ்வாறு தகவல் சொன்னார்கள். இந்த விபரத்தையும் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நானாகவே காயம் ஏற்படுத்திக் கொண்டும், வீட்டில் தனிமையில் இருக்கும் போது பயப்படுவதாக சொன்னதன் பேரில் எனது கணவர் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல.

12. இது சம்பந்தமாக மனுதாரர் எனது பெற்றோர்களிடம் தெரிவித்தபோது எனது பெற்றோர்கள் ஊருக்கு என்னை அனுப்பி வைக்க சொல்லியும், தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் சொன்னார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் மனுதாரர் என்னை பெற்றோர் வீட்டில் விட்டுச் சென்றார் என்றால் சரிதான். மனுதாரர் விடுமுறை நாட்களில் என்னை பார்க்க வரும்போதெல்லாம் தேனியில் உள்ள கீர்த்தனா மனநல மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்கு அழைத்துச் செல்வார் என்றால் சரியல்ல. கடைசியாக நான் கீர்த்தனா மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றால் வழக்கு நடைபெறுகிறது என்று தெரிந்தபின்பு நான் மருத்துவமனை செல்லவில்லை, அதற்கு முன்பு சென்றிருக்கிறேன்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. சுமார் 1 ½ ஆண்டுகள் எனது மகள் எனது கணவரான மனுதாரருடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரரின் தாயார் எனது மகளை பார்த்துக் கொள்வதாக சொன்னதன் பேரில் எனது மகளின் தேவைகளை அவர் கவனித்துக் கொள்கிறார். எனது மகளை என்னுடன் அனுப்பக்கோரி நான் இதுநாள் வரை நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது மகள் என்னுடன் வராததற்கு என்ன காரணம் என்றால் எனது மகள் படிக்கும் பள்ளியில் பீஸ் கட்ட வேண்டும் என்பதற்காக என்னுடன் வந்தால் அவரால் பீஸ் கட்ட முடியாது என்பதால் எனது மகள் மனுதாரருடன் தங்கி படித்து வருகிறார்.

**<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

13. இதுவரை மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இருப்பதாகவும், சேர்ந்து வாழ ஏற்பாடு செய்யுமாறு நான் நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எனது கணவருக்கு எதிராக நான் புகார் கொடுத்ததாக சொல்லும் ஆவணங்கள் ஏதேனும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு புகார்களை எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் என்னை கொடுமைப் படுத்தினார், அடித்தார், எனக்கு காயங்கள் ஏற்படுத்தினார் என்பது தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. 30.09.2024 ம் தேதியன்று மதியம் மனுதாரருக்கு நான் பாலில் மயக்க மருந்து கொடுத்து விட்டு வீட்டை விட்டு நான் அவருக்கு தெரியாமல் கிளம்பி சென்றேன் என்றால் சரியல்ல. வீட்டை விட்டு நான் போன காரணத்தினால் தான் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் குற்ற எண்.301/2024 வுமன் மிஸ்ஸிங் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் என்னை துன்புறுத்தி அடித்த காரணத்தினால் தான் நான் வீட்டை விட்டு சென்றேன்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. எனது கணவர் மருத்துவர் கொடுக்கக் கூடாது என சொல்லியும் எனக்கு மருந்து கடைகளில் மருந்தை வாங்கி வற்புறுத்தி கொடுத்து வந்தார் என்னை கொடுமை செய்து அடித்தார் என்று நான் தற்போது சாட்சியத்தில்

குறிப்பிட்டுள்ளேன், இருந்தும் நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேனா என்றால் எனக்கு கணவர் வேண்டும், எனக்கு குழந்தை வேண்டும் என்பதால் நான் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேன். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் நான் ஏன் மனுதாரர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் வேறு ஒரு பெண்ணுடன் அவர் குடும்பம் நடத்துவதால் அவருடன் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. அந்தப் பெண்மணி யார் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இதுநாள் வரை நான் அது பற்றி தெரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

15. நான் மனுதாரரிடம் இருந்து கோபித்துக் கொண்டு மதுரைக்கு போய் இரண்டு மாதங்கள் இருந்தேன் என்பது எந்த வருடம் என்றால் அவ்வாறு நான் மதுரைக்கு எல்லாம் செல்லவில்லை. நான் 2018 ஆம் ஆண்டு இரண்டு மாதங்கள் மதுரையில் பறவை என்ற காப்பகத்தில் தங்கி இருந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வந்தார் என்ற விவரத்தையும் நான் எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை, எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும்.

16. இந்த நீதிமன்றத்தில் 2019 –ம் ஆண்டு எனது கணவர் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு IDOP.No.14/2019 என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் வீட்டில் பிரச்சனை செய்ய மாட்டேன் என்றும் சொல்லாமல், கொள்ளாமல் வெளியில் செல்ல மாட்டேன் என்றும், நான் உறுதி அளித்ததன் பேரில் அந்த மனுவை வாபஸ் வாங்கிக் கொண்டார் என்றால் சரியல்ல.

17. நீதிமன்றத்தில் நீதிபதி அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது வரதட்சணை நடவடிக்கை எடுக்க வேண்டும் என சொன்னதன் பேரில் சேர்ந்து வாழ்வதாக மனுதாரர் தெரிவித்து அவர் ஏற்கனவே தாக்கல் செய்த மனுவை

வாபஸ் வாங்கிக் கொண்டார். வழக்கிற்காக இந்த விபரத்தை தற்போது பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரை விட்டுவிட்டு வீட்டில் இருந்து அவருக்கு சொல்லாமல் கொள்ளாமல் 2,3 மாதங்கள் வெளியில் பலமுறை சென்ற காரணத்தினால் தான் எனக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டதா, உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டதா என்ற பயத்திலேயே மனுதாரர் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல.

18. என்னுடன் மனுதாரர் வாழ்ந்தால் அவரது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற காரணத்தினால் இறுதியாக என்னிடம் இருந்து விவாகரத்து வாங்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவர் இந்த மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் நான் பொய்யான விபரங்களை சொல்லி எதிர் வழக்குறை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த எதிர் வழக்குறை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் உண்மையான காரணங்களை சொல்லி விவாகரத்து கோரியதால் அந்த மனு அனுமதிக்க வேண்டுமென்றால் சரியல்ல. எனது தவறுகளை மறைப்பதற்காகத்தான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.05 17:59:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.